**மாவட்ட நீதிமன்றம், உதகமண்டலம்**

**G.W.O.P. No. 68 of 2023 உ/இ G.W.O.P.No.2/2024**

**ம.சா.1 ஜெயகுமார் இன்று 11.08.2026 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்:**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

எ.சா.ஆ–1 வரிசை அசல் பாலிசிகள் என் மாமனாரிடம் இருந்து வந்த நிலையில் எவ்வாறு அவை சம்பந்தப்பட்ட தொகைகளை பெற்றேன் என்றால் அது சம்பந்தப்பட்ட எண்கள் என்னிடம் இருந்தது, அதை வைத்து நான் பணம் பெற்றேன். அந்த பாலிசிகளில் என் மகளைத்தான் நாமினி ஆக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை, என்னைத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் கூறுவது தவறு என்றும், அந்த பாலிசிகளில் என் மகளைத்தான் நாமினி ஆக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், என் மகள் மைனர் என்பதால் என்னை Appointee ஆக மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் தவறு. இது சம்மந்தமாக என் மாமனார் மேற்படி Insurance company க்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அந்த பாலிசி மூலம் பெற்ற தொகைகளை என்ன செய்தேன் என்றால் என் மகள் பெயருக்கு அந்த தொகைகளை அவர் மேஜர்ஆன பிறகு எடுத்துக்கொள்ளும் வகையில் மாற்றி இருக்கிறேன். இதை தெரிவிக்கும் ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன்.

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா கோத்தகிரி கிளையில் என் மைனர் மகள் பெயரில் என் மாமனார் போட்டிருந்த தொகை ரூபாய் 1,65,000/–ஐ

நான் எடுத்துக்கொண்டுவிட்டேன் என்றால் தவறு. என் மாமியார் 2021ல் இறந்தார் என்பது சரி. என் மாமியார் இறந்தபிறகு ஏன் நான் உடனடியாக இந்த மனுவை தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு கொஞ்சம் வேலை இருந்தது. என் மாமனார் G.W.O.P. 2/2024 மனுவை 11.10.2023அன்றே தாக்கல் செய்துவிட்டார் என்பது எனக்கு தெரியாது. எனவே நான் தாக்கல் செய்த மனுவிற்கு போட்டியாகதான் என் மாமனார் அந்த மனுவை தாக்கல் செய்ததாக நான் கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல.

என் மகள் தற்பொழுது 11ஆம் வகுப்பு ஆல்பாஜிகே என்ற பள்ளியில் அரவேணுவில் படிக்கிறார். என் மகளை 11ஆம் வகுப்பிற்கு பள்ளியில் சேர்க்க நான் நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் இல்லை, என் மகளை அப்பொழுது என்னை பார்க்க அவர்கள் அனுமதிக்கவில்லை. எனக்கு வழங்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் முதல் மற்றும் 3வது சனிக்கிழமைகளில் என் மகளை பார்த்துவருகிறேனா என்றால் கடந்த 2வருடமாக பார்க்கவில்லை, இதற்கு அனுமதிக்கவில்லை என்று Contempt மனு தாக்கல் செய்துள்ளேன். அந்த மனு என்ன ஆனது என்றால் தாக்கல் செய்துள்ளது மட்டும் எனக்கு தெரியும். சுமார் 1 வருடத்திற்கு முன்பு அந்த மனு தாக்கல் செய்யப்பட்டது. நான் என் மகளை பார்த்து வந்த காலக்கட்டத்தில் அவருக்கு துணி மணிகள் மற்றும் பொருட்கள் எதுவும் வாங்கி கொடுத்ததற்கு பில்கள் உள்ளதா என்றால் பில்கள் இல்லை, போட்டோ உள்ளது. என் மகளுக்கு பள்ளி கட்டணம் எதுவும் செலுத்தியதாக பில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளதாக பொய்யாக

என் மகளை பள்ளியில் சேர்த்துள்ளார்கள், அதனால் அதற்கு கட்டணம் இல்லை. அது தனியார் பள்ளி. நான் கூறுவது தவறு என்றும், அது தனியார் பள்ளி என்பதால் அதற்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை என் மாமனார்தான் செலுத்திவருகிறார் என்றும் சொன்னால் தவறு. என் மாமனார் சுகாதாரதுறையில் பணிபுரிந்து என் திருமணத்தின்போதே ஓய்வு பெற்றுவிட்டார். அவருக்கு தற்பொழுதும் ஓய்வூதியமாக நல்ல தொகை வந்துகொண்டிருக்கிறது என்றால் எனக்கு அது தெரியாது. O.P.2/2024ல் நான் தாக்கல் செய்த எதிருரையில் என் மனைவியை அவர் பெற்றோர் குடும்பத்தில் கொடுமை செய்து வந்ததாக குறிப்பிட்டுள்ளதை பொறுத்து எப்பொழுது என்ன கொடுமை செய்தார்கள் என்றால் என் அப்போதைய வழக்கறிஞர் அவ்வாறு தவறாக அதை குறிப்பிட்டுள்ளார். மேற்படி எதிருரை பத்தி 8ல் நான் சொத்து உள்ளதாகவும், ட வியாபாரம் உள்ளதாகவும், வாகனங்கள் வைத்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளதை தெரிவிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். G.W.O.P.68/2023ல் என் மனைவி இறந்ததை பொறுத்து கருணை அடிப்படையில் வேலை கொடுக்கவேண்டும் என்று கோரி மனு கொடுத்ததாக ஒரு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்பது சரி. என் மகளுக்கு வேலை கேட்டு அந்த மனுவை கொடுத்தேன். நான் கூறுவது தவறு என்றும், எனக்கு வேலை கேட்டு அந்த மனுவை கொடுத்துள்ளேன் என்றும் சொன்னால் தவறு. இளவராக இருக்கும் மகளுக்கு வேலை கொடுக்க வாய்ப்பில்லை என்றால் பின்னிட்டு கொடுக்ககோரி அந்த மனுவை கொடுத்தேன். என் மனைவி இறந்தபிறகு நான் வேறு ஒருவரை திருமணம் செய்துள்ளேன் என்றால் இல்லை.

என் மகளுக்கு தற்பொழுது 16 வயது. என் மனைவியின் உயிலின் அடிப்படையிலேயே அவருக்கு சேரவேண்டிய தொகைகள் அனைத்தும் என் மகளைதான் சேரவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தும், அந்த தொகைகளை பெற்று நான் செலவழித்துவிட்டேன் என்றும், எனக்கு உண்மையில் என் மகள்மீது எந்த பாசமும் கிடையது என்றும் சொன்னால் தவறு. எனக்கு எந்த வேலையும், வருமானமும் இல்லை என்றால் தவறு. என் மைனர் மகளை என் மாமனார்தான் நல்லமுறையில் பராமரித்து வருகிறார் என்றும், எனவே நான் தாக்கல் செய்துள்ள G.W.O.P. 68/2023 தள்ளுபடி ஆக வேண்டும் என்றும்,என் மாமனார் தாக்கல் செய்து G.W.O.P.2/2024 அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் சொன்னால் தவறு.

**மறு விசாரணை**: இல்லை.

A. Muraleedharan

Digitally signed by A. Muraleedharan
Date: 2026.08.11 16:30:39 +0530